# 15

# "கிறிஸ்துவின் முன் மாதிரியைப் பின்பற்றி அன்பிலே நடந்து கொள்ளுங்கள்"

## (5:1-6)

"நடந்து கொள்ளுங்கள்" என்பது அதிகாரம் 5ல் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவை முன்மாதிரியாகப் பயன்படுத்தி, எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களை பவுல் "அன்பிலே நடந்து கொள்ளுங்கள்" என்று வற்புறுத்தினார், மேலும் தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய இராஜ்யத்திலே சுதந்தரத்தைக் கொண்டிருப்பவர்களாகிய பரிசுத்தவான்களுக்கேற்றபடியும் நடந்து கொள்ளக் கூறப்பட்டார்கள்.

## தேவன் மற்றும் கிறிஸ்துவின் அன்பைப் பின்பற்றுதல் *(5:1, 2)*

**[1]ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, [2]கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.**

***வசனங்கள் 1, 2.*** சில வழிகளில் "நடந்து" கொள்ளும்படியான பவுலின் அறிவுரைகள் பவுலின் வேண்டுகோள் பகுதியாக எபேசியரில் (அதிகாரங்கள் 4-6) காணப்படுகிறது. **ஆகையால்** என்று 5:1ல் சொல்லப்படுவது இந்த அறிவுரை சற்றுமுன்பு பவுல் எழுதியவைகளோடு தொடர்புடையது என்று காட்டுகிறது. அதிகாரம் 4ல் கூறப்படும் உள்ளத்தில் புதிதான ஆவி மற்றும் புதிய மனுஷன் ஆகியவை தேவனைப் பின்பற்றுவதிலே விளங்கப்பண்ண வேண்டும்.

**பின்பற்றுபவர்கள்** என்பது *mimetai,* என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, இதிலிருந்துதான் "பிறர்போல் நடந்து கொள்ளுதல்" எனும் வார்த்தை வந்தது. கிறிஸ்தவர்கள் **அன்பிலே நடக்கும்போது "தேவனைப்** போல் நடக்கிறவர்களாயிருக்க வேண்டும்." "தேவனைப் பின்பற்றுதல்" என்பது பழைய ஏற்பாட்டில் ஒரு நிறைவுபெற்ற சிறப்பான கருத்து, இதன் உண்மையான அர்த்தத்தைக் கொடுக்கும் வார்த்தை பின்பற்றுதலுக்கு அங்கே கொடுக்கப்படாவிட்டாலும் கருத்து அதுதான். பழைய ஏற்பாட்டு தேவனுடைய ஜனங்கள், "உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர்,

ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்று சொல்லப்பட்டார்கள் (லேவியராகமம் 19:2). இது தேவனைப்போலிருக்கும்படியான ஒரு கட்டளையாயிருந்தது. இயேசு, புதிய ஏற்பாட்டில் "ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" என்று சொன்னார் (லூக்கா 6:36). "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்." என்றும் இயேசு போதித்தார் (மத்தேயு 5:48). கிறிஸ்தவர்கள், தேவனுடைய **பிரியமான பிள்ளைகளாக** அவரைப் போலிருக்கும்படி வளர வேண்டும். இந்த நிருபத்தின் துவக்கத்தில், கிறிஸ்தவர்கள் தேவனுடைய குடும்பத்தில் சுவிகாரமாய் எடுக்கப்பட்டார்கள் என்று பவுல் குறிப்பிட்டார் (காண்க 1:5). 5:1ல், நாம் பிரியமான பிள்ளைகளைப் போல நம்முடைய அன்பின் பிதாவைப்போல் வருவதற்கு குடும்பத்தின் சாயலைத் தரித்து கொள்ள வேண்டும் என்று அவர் சொன்னார். தேவன் தமது ஜனங்களுடன் கொண்டுள்ள நட்புறவுக்கு தேவன் செயலாற்றுவது போலவே அவருடைய ஜனங்கள் மற்றஜனங்களோடு நட்புறவு பாராட்ட அதை (தேவனுடைய) அளவுகோலாகக் கொள்ள வேண்டும்.

4:24ல், பவுல் புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளும் கிறிஸ்தவர்கள், நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனைப் போலிருக்க வேண்டும் என்பதை பவுல் காண்பித்தார். 4:32ல், அவர் நாம் தயவையும் மன உருக்கத்தையும் மன்னிப்பையும் தேவனைப் போலவே வெளிப்படுத்த வேண்டும் என்று காண்பித்தார். நாம் "அன்பிலே நடப்பதற்கு" நம்முடைய முன்மாதிரி தேவனே (5:2), அவர் "தம்முடைய குமாரனை உலகத்திற்குக் கொடுத்து இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16), மற்றும் கிறிஸ்து, "நமக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார்" (5:2). வசனம் 1, 2ல் தேவனிலிருந்து கிறிஸ்துவுக்கு மாறிப் பேசும் முறையை எளிமையாகச் சொன்னால் தேவன் தமது அன்பை கிறிஸ்துவைக் கொடுப்பதன் மூலம் விளக்கப்பண்ணினார் என்பதையும், கிறிஸ்து தமது அன்பினிமித்தம் தம்மைத்தாமே நமக்காக ஒப்புக் கொடுத்தார் என்பதையும் வலியுறுத்துகிறார்.

தேவனுடைய அன்பையும் கிறிஸ்துவின் அன்பையும் பின்பற்றுவது பற்றி பேசப்படுகிற விஷயத்தில் பவுல் இந்த அன்பு நமக்கு எப்படிக் காட்டப்பட்டது என்பதை விளக்கப்படுத்த ஏதுவாக்கிற்று: **கிறிஸ்து ... நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்.** "தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்" என்பது "மரணத்துக்குத் தம்மையே அர்ப்பணித்ததைக்" குறிப்பிடுகிறது.[1] மற்றும் "நமக்காக" என்பது "நமது சார்பாக," அல்லது "நமக்குப் பயனுண்டாக," என்று பொருள்படும், இது அவருடைய இரட்சிப்பின் ஈவை ஏற்றுக் கொள்ளும் அனைவருக்கும் பொருந்தும்.[2] பவுல் அடிக்கடி இந்தக் கருத்தை தமது நிருபங்களில் முன் வைத்துள்ளார் (ரோமர் 4:25; 8:32; கலாத்தியர் 2:20; எபேசியர் 5:25).

**காணிக்கையாகவும் பலியாகவும்** என்பது கிறிஸ்துவின் மரணத்தின் நோக்கத்தை விளக்கப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டு பலிகளையும் காணிக்கைகளையும் நிறைவேற்றும்படி அவர் மரித்தார், மற்றும் அவருடைய சிந்தப்பட்ட இரத்தத்தினாலே பாவத்திற்காக மன்னிப்பின் திருப்தியைக் கொண்டு வந்தார் (காண்க எபிரெயர் 10:14-18; 1 யோவான்

*2:2; 4:10). தொடர்ந்து, பாவம் மனிதனுக்கும் தேவனுக்குமிடையிலிருந்த உறவை அழித்ததினாலே, கிறிஸ்துவின் மரணம் ஒப்புரவாகுதலைக் கொண்டு வந்தது (காண்க ரோமர் 5:11; 2 கொரிந்தியர் 5:18, 19). பவுல் கிறிஸ்துவின் காணிக்கை மற்றும் பலியானது* **சுகந்த வாசனையாகக்** *செலுத்தப்பட்டது என்றபோது இங்கே அவர் அநேகமாக பழைய ஏற்பாட்டு பலிகள் தேவனுக்கு சுகந்த வாசனையாக அவரை முகரச்செய்ததை பிரதிபலிப்பது போல் சொல்லியிருக்கலாம் (காண்க ஆதியாகமம் 8:21; லேவியராகமம் 1:9, 13, 17). கிறிஸ்துவின் பலி தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாயிருந்தது என்று சொன்னார். இதற்கு ஒப்பான சொல்நடையை பவுல் பிலிப்பியர் 4:18ல் பயன்படுத்தி சகோதரர்கள் தனக்கு செய்த பொருளாதார உதவியை அப்படிப்பட்ட பலியாகக் குறிப்பிட்டார்.*

*எபேசியர்கள் மற்றவர்களுக்கு அன்பை வெளிப்படுத்தும் போது தேவனுடைய அன்பையும் கிறிஸ்துவின் அன்பையும் காட்டவேண்டியவர்களாயிருந்தார்கள். "நிச்சயமாக ஒருவர் தனது சுய ஆர்வத்தில் மற்றவர்களுடைய நலனுக்காக தியாகமாக கொடுப்பதே சமுதாயத்தில் காட்டப்படும் எல்லா ஒற்றுமைகளுக்கும் மேலான தகுதி."[3] பவுல் பேசிய அன்பு தீர்மானமானது; அது வெறும் உணர்வல்ல, ஒருவர் எடுக்கும் முடிவு. கூடுதலாக, இந்த அன்பு, செயல் வடிவம் கொண்டது. செய்யும் கிரியைகள் மூலம் அது வெளிப்படுத்தப்படுகிறதேயன்றி வெறும் வார்த்தைகளினால் அல்ல. இறுதியாக, அப்படிப்பட்ட அன்பு நிபந்தனைக்குட்படாதது. அது நேசிக்கப் பட்டவர்களால் (அன்பை பெற்றுக் கொண்டவர்களால்) செய்வதையோ செய்யாமல் விடப்பட்டதையோ கொண்டு தீர்மானிப்பதல்ல. மாறாக அன்பு செலுத்துகிற ஒருவரின் இருதயத்தைக் கொண்டு தீர்மானிப்பது. கிறிஸ்துவுக்குள் தேவனுடைய அன்பு - தெரிவு செய்து கொள்ளும் அன்பு, செயல் வடிவம் கொண்ட அன்பு, நிபந்தனையற்ற அன்பு - இந்தவகை அன்புதான் கிறிஸ்தவன் பின்பற்ற வேண்டிய அன்பு.*

## *கீழ்ப்படியும் வாழ்க்கை முறையில் வாழ்தல் (5:3-6)*

**3மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. 4அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ் செய்தலே தகும். 5விபச்சாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. 6இப்படிப்பட்டவைகளினிமித்தமாக கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவக் கோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.**

*5:3-6 ல் பவுல் 5:1, 2ல் அறிமுகப்படுத்திய அன்பின் விதியை கைக்கொள்ளும் முறையாக முன் வைக்கிறார். அங்கே பவுல் ஒருவர் தேவனைப் போலவும் கிறிஸ்துவைப் போலவும் அன்புகூர்ந்தால் அவர் பாவச் சிந்தனைகளையும்*

*செயல்களையும் விட்டு விலகியிருப்பார் என்று காண்பித்தார். தேவனையும் கிறிஸ்துவையும் பின்பற்றுகிற ஒரு நபர் பாலுணர்வு நடத்தைகளில் தனது ஆசை இச்சைகளையும் செயல்களையும் தவிர்த்து, கெட்ட வார்த்தைகளைப் பேசாமலும், ஒழுக்கக் கேடான வார்த்தைகளையும், தேவபக்தியற்ற வார்த்தைகளையும் தீமையான பேச்சுக்களையும் இந்த நடத்தையோடே விட்டு விலகுவார்கள்.*

***வசனம் 3.*** *முதலாவதாக, பவுல்* ***வேசித்தனத்தைக்*** *குறிப்பிட்டார். இதற்கான கிரேக்க வார்த்தை போர்னியா, "இது ஒரு விசாலமான பதம், பொதுவான பாலுறவு ஒழுங்கீனங்களை இது அடையாளப்படுத்துகிறது. ஆகிலும் குறிப்பாக விபச்சாரத்தையும் வேசிகளுடனான உடலுறவையும் குறிப்பிடுகிறது."*[4] KJV, "fornication" *என்றும்,* NASB *யோவான் 8:41லும் நடபடிகள் 15:20, 29; 21:25 லும் அந்த வார்த்தையை பயன்படுத்தியுள்ளது.*

*"விபச்சாரம்" என்பது (moicheia) மற்றொருவருடைய மனைவியுடன் சட்டவிரோதமான உடலுறவைக் குறித்துப் பேசுகிறவேளையில், "வேசித்தனம்" அனைத்து வித சட்டவிரோதமான பாலுறவுகளையும், தடை விதிக்கப்பட்ட நெருங்கிய உறவினருடனான உடலுறவு, ஓரினச் சேர்க்கை, மற்றும் விபச்சாரம் போன்றவைகளை உட்படுத்தி பேசும் வார்த்தை. யூதா 7ல் சோதோம் கொமேரா பற்றி பேசுகிறது (காண்க ஆதியாகமம் 19:1-11). இந்தப் பட்டணங்களில் குடியிருந்தவர்கள் தங்களை "முரட்டுத்தனமான ஒழுங்கீனத்திற்கு" ஒப்புக் கொடுத்திருந்தார்கள், யூதா கிரேக்கப்பதமான ekporneuō வைப் பயன்படுத்தி இந்தப் பட்டணங்களின் பாவங்களை விவரித்தார். மேலும், ஆதியாகமம் 19 சோதோமின் மனுஷர் கர்த்தரிடத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த இரண்டு தூதர்களுடன் பாலுறவு கொள்ள விரும்பினார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லுகிறது. இப்போழுது நாம் ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்கிற இந்த வார்த்தை வேதாகமம் பயன்படுத்தியுள்ள அடிப்படையில் பரிசீலித்த பின், ஜனங்களுக்கிடையே ஒருவரோ அல்லது உறவுகொள்ளும் இருவருமோ ஏற்கனவே திருமணமாகியிருந்து பிறருடன் கொள்ளும் பாலுறவு "விபச்சாரம்" எனும் பாலுறவு பாவத்தைக் குறிப்பிடுகிறது என்றும், "வேசித்தனம்" என்பது சகல வித பாலுறவு பாவங்களையும், (குறிப்பிடப்படாத) விபச்சாரம் உட்பட எந்த பாலுறவும் இதில் அடக்கம் என்றும் எண்ணிக் கொள்ளுவதே சரியானதாகக் காணுகிறது. சில வேளைகளில் ஒரே வசனப் பகுதியில் "விபச்சாரமும்" "வேசித்தனமும்" குறிப்பிடப்பட்டிருக்கக் கூடும் (காண்க மத்தேயு 15:19; 19:9* [KJV]; *மாற்கு 7:21; எபிரெயர் 13:4).*

NIV *எனும் மொழிபெயர்ப்பில் porneia என்பதற்கு பாலுறவு ஒழுங்கீனம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அது இந்த வார்த்தைகளின் விசாலமான இயல்பை வலியுறுத்துகிறது. இது தேவனால் தடை செய்யப்பட்ட எந்த பாலுறவையும் உள்ளடக்குகிறது. ஒருவருக்கொருவர் திருமணமாகாமலேயே கொள்ளும் பாலுறவு, மனுஷன் மிருகத்துடன் கொள்ளும் உறவு (யாத்திராகமம் 22:19), ஒரு ஆணோடு ஆணோ அல்லது ஒரு பெண்ணுக்கும் பெண்ணுக்குமிடையேயான ஒரின பாலுறவு (ரோமர் 1:26, 27) எல்லாம் இதில் அடக்கம்.*

*இரண்டாவதாக,* ***எந்த அசுத்தச் செயலையும்*** *பவுல் தடை செய்கிறார். கிரேக்க வார்த்தையான akatharsia, எனும் பெயர்ச் சொல் இங்கே*

பயன்படுத்தப்பட்டுள்ளது, அதன் பொருள் ஒழுக்க ரீதியான "எந்த அசுத்தமான சிந்தையும் வாழ்வும்."[5] *Akatharsia,* எனும் வார்த்தை இந்த வசனப்பகுதியிலும் பிற வசனக் குறிப்புகளிலும் பாலுறவு பாவங்களுடன் சேர்த்தே பேசப்படுகிறது (காண்க 2 கொரிந்தியர் 12:21; கலாத்தியர் 5:19; கொலோசெயர் 3:5; 1 தெசலோனிக்கேயர் 4:3, 7). எபேசியர்கள் பாலுறவு சம்பந்தப்பட்ட பாவச் செய்கைகளிலிருந்து மாத்திரமல்ல, அவற்றைப் பற்றிய சிந்தனைகளிலுமிருந்து விலகியிருக்கும்படிக் கூறப்பட்டனர்.

மூன்றாவதாக, பவுல் **பொருளாசையைப்** பற்றிக் (KJV-ல் "பேராசை";) குறிப்பிடுகிறார். பொருளாசை (*pleonexia*) என்பது இன்னும் அதிகமாய் "தனக்கு வேண்டும் என்று எண்ணுவது அல்லது தன்னிடமில்லாத ஒன்றுக்காக ஆவல் கொள்வது."[6] இந்த வார்த்தை "ஒழுங்கீனங்களும்" "அசுத்தங்களும்" ("சுத்தமில்லாதவை"; KJV) ஆகியன வளருவதற்கேதுவான பிரச்சனையாக அடையாளப்படுத்துகிறது. "போராசை என்பது இன்னும் அதிகமான உலக ஆஸ்திகள் மீது ஆசைகளைக் குறிக்கின்ற வேளையில், இந்த வசனப்பகுதியில் பாலுறவு நடத்தையில் பேராசை கொண்டிருப்பதைக் குறிப்பதாக இருக்கலாம்." புதிய ஏற்பாட்டின் பிற வசனப்பகுதிகளில் *pleonexia* என்பது *porneia,* என்பதுடன் பயன்படுத்தப்பட்டதால், பேராசை என்பது உலகப் பொருள் மீது அளவு கடந்த ஆசைக்கும் மேலான ஆசை கொள்வது என்று கருத்து தெரிவிக்கிறது (காண்க 1 கொரிந்தியர் 6:9, 10; கொலோசெயர் 3:5).

**இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள் சொல்லப்படவுங் கூடாது.** என்பது வசனம் 12ல் அப்போஸ்தலன் எழுதினதை முன்னறிவிக்கிறது. "அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே." இந்தத் தடை (விலக்கு) வசனம் 3ல் மிகவும் பலமாய் வலியுறுத்தும் கிரேக்க எதிர் மறைச் சொல்லாகிய *mēde* என்ற வார்த்தையால் அறிமுகப்படுத்தப்படுகிறது. பவுலின் விவாதம் இந்தப் பாவங்களைக் குறித்து பேசி "ஒரு சகித்துக் கொள்ளும் சூழலை உருவாக்கி அவர்களுடைய கைக்கொள்ளும் முறையை மறைமுகமாக மேம்படுத்தவும் செய்யும்."[7]

***பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி*** என்பது பாலுணர்வு பாவங்களை தவிர்க்க செயல் தூண்டுதலைத்தருகிறது. உலகத்து மக்களைக் காட்டிலும் பரிசுத்த ஜனங்கள் வித்தியாசமான அளவுகோலின் அடிப்படையில் வாழ்கிறார்கள். தேவனையும் கிறிஸ்துவையும் பின்பற்றுகிறவர்களாகிய நாம், பரிசுத்தமும் குற்றமற்றவர்களாகவும் இருக்க வேண்டியவர்கள் (1:4). "ஏற்றபடி" (*prepō*) என்பது கிறிஸ்தவர்களின் பரிசுத்த ஜீவியத்துடன் சம்பந்தப்பட்டது. (இந்த வார்த்தையின் வடிவம் தீத்து 2:1ல் பவுல் பயன்படுத்துவதைக் காண்க.) 1 தெசலோனிக்கேயர் 4:3-7 லும் 1 தீமோத்தேயு 2:10 லும் பவுல் பாலுணர்வு ஒழுங்கீனங்களை கிறிஸ்தவர்களின் பரிசுத்த ஜீவியத்துடன் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

**வசனம் 4. புத்தியீனமும்** என்பது *aischrotēs,* என்பதன் மொழிபெயர்ப்பு, இதன் பொருள் "வெட்கமின்மை, பொதுவாக ஒழுங்கங்கெட்ட எவ்வித நடத்தையும்"[8] ஆனாலும் இது புத்தியீனமான பேச்சு மற்றும் பரியாசத்துடன் இணைந்து பேசப்படுகிறது, ஆதலால் இது வெறுப்பூட்டுகிற ஒரு சொல்லாக குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது. (காண்க கொலோசெயர் 3:8, இங்கே பவுல்

*aischrologia,* பயன்படுத்துகிறார், அதன் பொருள் "வம்பு வார்த்தைகள்" அல்லது "அசுத்த வார்த்தைகள்" [NIV].) "புத்தியீனமான பேச்சு" என்பது *mōrologia,* விலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, இது ஒரு தொகுப்பு வார்த்தை (*mōros,* "மதியீனம்") மற்றும் (*logos,* "பேச்சு"),[9] பாலுணர்வு பாவத்துடன் தொடர்புடைய மதியீனமான பேச்சுக்கள். பவுல் விலக்கும்படி சொன்னவைகளுடன் "பரியாச வார்த்தைகளையும் இணைத்தார்" இது *eutrapelia,* என்பதன் மொழிபெயர்ப்பு, இந்த வசனப்பகுதியில் "வெறுப்பூட்டும் பரியாசம்"[10] பாலுணர்வு சம்பந்தப்பட்ட கேலி வார்த்தைகள். எபேசியர்கள் பாலுணர்வு பாவ சம்பந்தப்பட்ட வேடிக்கைப் பேச்சை பேச பவுல் விரும்பவில்லை. இந்தப் பாவங்களைக் குறித்த அப்படிப்பட்ட எண்ணங்கள் சகிப்புக்கும் அல்லது உட்படுத்திக் கொள்வதற்கும் உரிய சூழலை உண்டாக்கும். பவுல் இப்படிப்பட்ட பாவ வாய் பேச்சுக்கள் **தகாதவைகள்,** அல்லது தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு ஏற்காதவை என்று கூறினார்.

பரிசுத்தவான்களுக்குத் தகுதியுடையது **ஸ்தோத்திரஞ் செலுத்துதலே.** நன்றி செலுத்துதல் என்பது தேவனுடைய அங்கீகாரம் பெற்றது, தருமஞ்செய்கிறவராகிய அவருடைய பிரசன்னத்தில் வாழுகிறோம் மேலும் அவருடைய பரிசுத்தவான்களாகிய நாம் அவருக்கே கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று ஒத்துக் கொள்வதாகும். நன்றி செலுத்துதல் என்பது பாவத்தில் வாழ்வதற்கும் பாவப் பரியாசம் செய்வதற்கும் ஒரு நச்சுமுறிவு மருந்தாகும். பாவத்தில் வாழ்கிறவர்கள் தேவனைக் குறித்த சிந்தனையற்றவர்கள் மற்றும், மற்ற காரியங்களின் மத்தியில் நன்றியற்றவர்களுமாவார்கள்.

**வசனம் 5.** மேலும் செயல் தூண்டுதலாக, பவுல் ஒரு கடினமான எச்சரிக்கையை மேலே குறிப்பிட்ட தீய வழிகளில் பங்குபெறும் அனைவருக்கும் முன்பாக வைக்கிறார்: **விபச்சாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே.** இங்கே, அவர் பொருளாசைக்காரர்கள். விக்கிரகாராதனைக் காரர்களாயிருக்கிறார்கள் என்ற கருத்தைச் சேர்த்துச் சொல்லுகிறார். பாலுணர்வு பாவத்தில் பேராசை என்பது, தான் பாவஞ்செய்கிற நபரிடமிருந்து அதிகமாய் எதிர்பார்ப்பதையோ அல்லது அந்த (பாலூறவு) செயலையோ குறிப்பதாக இருக்கலாம், இதுவும் விக்கிரகாராதனையாகக் கூடும். ஒரு விக்கிரகம் என்பது தேவனுக்கு மேலாக வைக்கப்படுகிற எதுவுமே, மற்றும் இந்த வசனப்பகுதியில் விக்கிரகம் என்பது பாலுணர்வு பாவம். இப்படிப்பட்ட விக்கிரக ஆராதனை செய்பவர்களுக்கு "தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே பங்கில்லை." பவுல் முன்பே பரிசுத்தவான்களின் சுதந்தரம் குறித்துப் பேசியிருக்கிறார் (1:14, 18), மேலும் இந்த எச்சரிக்கையை பரிசுத்தவான்களுக்குக் கொடுத்து நமது சுதந்தரத்தைப் பறிக்கிற எந்த செயலையும் தவிர்க்க வேண்டும் என்று சொன்னார். ராஜ்யத்திலிருந்து புறம்பாக்கிப் போடும் சாத்தியக் கூற்று வேறிடங்களாகிய 1 கொரிந்தியர் 6:9 லும் கலாத்தியர் 5:21 லும் குறிப்பிடப்பட்டுள்ளது, அது கிறிஸ்தவர்கள் தங்கள் பகுதியில் பரிசுத்தமாய் வாழ செயலூக்கம் கொடுப்பதாகும். பவுல் குறிப்பிடும் பாவத்தில் வாழ்கிறவர்கள் தேவனுடைய ஆளுகைக்கும் கிறிஸ்துவின் ஆளுகைக்கும் புறம்பே வாழ்கிறார்கள்

*- அதுவே ராஜ்யம் - இச்செயல் நித்திய ராஜ்யத்தில் எவ்வித சுதந்தரத்தையும் விலக்கிவைக்கும்.*

***வசனம் 6.*** *தனது எச்சரிக்கையைத் தொடர்ந்து, பவுல் சொன்னார்,* **இப்படிப்பட்டவைகளினிமித்தமாக கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.** *எபேசியர்கள் ஒழுங்கீனச் செயல்கள் ஏற்புடையது என்றோ அல்லது பொறுத்துக் கொள்ளக் கூடியது என்றோ நினைக்கத்தக்கதாக யாரும் தங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட கையாளும் முறை "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின்" இருதயத்திலிருந்து வரும் வார்த்தைகளால் செயல்படுவர், அவர்கள் தங்கள் மேல் வரும் தேவனுடைய கோபாக்கினையை அறியாதிருக்கிறார்கள். வேத வசனங்களில் அடிக்கடி, தெளிவான பண்பை விளக்கிய ஒரு நபர், அந்தத் தொழில் அல்லது பண்பின் "குமாரன்" அல்லது "பிள்ளை" என்று அழைக்கப்பட்டிருந்தார் (மாற்கு 3:17; நடடிகள் 4:36). 2:3ல், எபேசியர்கள் "கோபாக்கினையின் பிள்ளைகள்" என்று அவர்கள் கிறிஸ்தவர்களாவதற்கு முன்பு அழைக்கப்பட்டனர், ஏனெனில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த சமுதாயம் அப்படிப்பட்ட தேவ கோபாக்கினையை வருவித்துக் கொள்ளத் தக்கதாயிருந்தது, வசனம் 6ல் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" என்று பவுல் பேசினார். முதல் நூற்றாண்டில் பாலுறவு பாவங்களைச் செய்தோர் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு இருக்காது என்று நம்பினவர்கள் மற்றும் அவ்வாறு போதிக்கப்பட்டவர்கள் கீழ்ப்படியாமையால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தனர் (காண்க ரோமர் 1:18-32).*

*தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய அன்பிலே நடந்து அவர்களைப் பின்பற்றும்படி சொன்னதை விளக்கப்படுத்த பவுல் ஏன் பாலுறவு பாவங்களை பயன்படுத்தி விவாதித்தார்? இதற்குரிய எளிய பதில் தேவனும் கிறிஸ்துவும் அன்புகூருவதுபோல, நாமும் அன்புகூருவது என்பது, மற்றவர்களுடைய நலனைத் தேடுவதாகும் - அவருக்கு உதவி செய்ய வேண்டுமேயன்றி துன்பம் கொடுக்கக் கூடாது, அவரை உயர்த்த வேண்டுமேயன்றி அழிக்கக் கூடாது. பாலுறவு பாவங்களில் இவைகளுக்கு எதிரான தாக்கமே காணுகிறது; அவைகளில் வேதாகமம் கூறும் அன்பு காணப்படுவதில்லை, மாறாக அவைகளைப் பயன்படுத்தும் மக்கள் இகழ்ச்சியே அடைவார்கள், ஏனெனில் அவர்கள் ஒருவருடைய சுய திருப்திக்காகப் பயன்படுத்துகிறார்கள். பாலுணர்வுகளை தேவனே சிருஷ்டித்தார், அது தேவனுடைய நோக்கத்திற்கு உட்பட்ட பகுதிக்குள் பகிர்ந்து கொண்டால் அதுமிகவும் அழகானது. பாலுணர்வு காரியங்களை தேவன் திட்டமிட்டபடி ஒரு மனுஷனுக்கும் ஒரு மனுஷிக்கும் இடையில் மட்டுமே அனுபவிக்கப்பட வேண்டும், அது திருமணத்தில், அன்பில் மற்றும் வாழ்நாள் முழுவதும் ஒப்புக் கொடுத்தலில் இருக்க வேண்டும். திருமணத்துக்குப் புறம்பே ஒரு ஆணும் ஒரு பெண்ணும் வைத்துக் கொள்ளும் உறவில் எவ்வித ஒப்புக்கொடுத்தலுமில்லாமல் எவ்வித திருமண பொறுப்பும் ஏற்காமலேயே திருமண சிலாக்கியங்களைத் தேடுவதாகும். திருமணத்துக்குப் புறம்பேயான பாலுறவில் ஈடுபடுவது ஜனங்களைப் பயன்படுத்திக் கொள்வதுமட்டுமேயன்றி அதிலே உண்மையான அன்பு இல்லை. இப்படிப்பட்ட பாலுறவு சம்மதத்துடன் நடப்பிக்கப்பட்டாலும்,*

*ஒருவர் தனது சுய திருப்திக்காக அப்படிப்பட்ட உறவுமுறையில் தொடர்ந்து வருகிற ஒப்புக்கொடுத்தல் இல்லாமல் மற்றொரு தனிநபரை பயன்படுத்திக் கொள்வதாகும். பாலுறவு பாவமானது ஒழுங்கீனத்தை எதிர்க்கக்கூடாத அளவுக்கு ஒருவரிடத்தில் அதிகமாக அன்பு செலுத்துதலும் அல்ல; மாறாக, அது பொறுப்பை ஏற்பதற்கு மிகச் சிறிய அளவு காட்டப்படும் அன்பு இது. ஒரு நபர் திருமண பொறுப்புக்களுக்கு ஒப்புக்கொடுக்காவிட்டால், பிறகு அந்த நபர், தேவன் திருமணத்தோடு சேர்த்துள்ள சலுகைகளை மட்டும் அனுபவிக்க உரிமை இல்லை. திருமணத்துக்குப் புறம்பே வைத்துக் கொள்ளும் பாலுறவு தவறானது, எனெனில் தேவன் அப்படிச் சொல்லியிருக்கிறார் (எபிரெயர் 13:4), ஆனால் ஜனங்கள் அன்பு காட்டப்பட வேண்டுமேயன்றி பயன்படுத்தப்படக்கூடாது என்பதாலும் அது தவறானது.*

## கைக் கொள்ளுதல்

***அன்பிலே நடந்துகொள்ளுங்கள் (5:1-6)***

*5:1-6 ல் கிறிஸ்தவர்கள் மகிமையுள்ள சபையின் அங்கத்தினர்களாய் "நடந்து" கொள்ள வேண்டிய இரண்டாவது நான்கு வழிகளை பவுல் விவாதித்தார். நிருபத்தின் இந்தப் பிரிவில், நாம் "அன்பிலே நடக்கவேண்டும்" என்று பவுல் சொன்னார்.*

*"தேவனைப் பின்பற்றுகிறவர்கள்."* நாம் "தேவனைப்பின்பற்றுவதற்காக" "அன்பிலே நடந்து" கிறிஸ்துவையும் பின்பற்றுகிறோம். பவுல் தேவன் பாவிகளுக்கென்று செய்த அனைத்துமே அவரது அன்பின் தூண்டுதலிலிருந்து பாய்ந்தது என்று முன்பே காட்டியிருந்தார் (காண்க 2:1-10). அவர் அன்புகூருவது போல நாமும் அன்புகூருவதன் மூலம், தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், குடும்பத்தின் சாயலை நாம் தரித்துக்கொள்ளவேண்டும் (5:1).

கிறிஸ்து தம்மைத்தாமே ஈவாக நமக்காக ஒப்புக்கொடுத்து பாவிகளுக்காக பூரணப்பட்ட பலியானார், அது தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பலி, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்ததினாலே அப்படி பலியானார். நமது வாழ்க்கைக்கு முன்மாதிரி கிறிஸ்து (காண்க ரோமர் 8:29; 1 பேதுரு 2:21), எனவே நாம் மற்றவர்களிடம் காட்டும் அன்பினிமித்தம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் (5:2).

*"பரிசுத்தவான்கள்" அல்லது "பாவிகள்."* நாம் பரிசுத்தவான்கள் (5:3) மற்றும் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" (5:6) ஆகிய இரண்டில் ஒன்றுக்கொன்று முரண்பாடான வாழ்க்கை நடையில் நாம் "அன்பிலே நடந்து கொள்ளவேண்டியவர்கள்." உண்மையான அன்பு இருக்க வேண்டிய இடத்தில் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில்" அருவெறுக்கத்தக்கதாக பாலுறவு பாவங்கள் இருப்பதை முன்னுதாரணமாக பவுல் காட்டுகிறார் (5:3-5).

*"பரிசுத்தவான்கள்"* மற்றவர்களிடம் தங்கள் அன்பால் சிறப்புக் குணசாலிகளாக காட்டப்படவேண்டியவர்கள். அவர்களை ஒரு பொருட்டாக நாம் கனப்படுத்தி அவர்களுக்கு நலமானவைகளைச் செய்ய வேண்டும்; பாலுறவு பாவங்களில் ஈடுபடுவோர் அன்புடையவர்களல்ல; அவர்கள் மற்றவர்களைத் தங்களுடைய சுய சந்தோஷத்துக்காகப் பயன்படுத்துகிறார்கள்.

"அன்பிலே நடந்து கொள்ளுதல்" என்பது பரிசுத்தவான்களுக்கேற்ற

*"தகுதியில்" தங்களை நடத்திக் கொள்வதுதான். நாம் "ஸ்தோத்திரஞ் செலுத்துதலினாலும்" (5:3, 4) தேவனுக்கு விரோதமான வஞ்சக வாழ்க்கை முறையிலிருந்து காத்துக்கொள்வதாலும் நாம் "அன்பிலே நடந்துகொள்ளுகிறோம்" (5:6).*

*கிறிஸ்தவனின் நடத்தை தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய அன்பின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது. இந்த வாழ்க்கைமுறை நாம் ஒருகாலத்தில் வாழ்ந்து கொண்டிருந்ததும் இன்றும் இந்த உலகம் வாழ்ந்து கொண்டிருப்பதுமான வாழ்க்கைக்கு மேலானது.*

ஜெய் லோக்ஹார்ட்

---

குறிப்புகள்

[1]S. D. F. Salmond, "The Epistle to the Ephesians," in T*he Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 3:350. [2]Ibid. [3]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 312. [4]Ibid., 321. [5]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 21; see also Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 34. [6]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament*, 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1991), 948. [7]Lincoln, 322. [8]Salmond, 352. [9]Zodhiates, 938. [10]Ibid., 918.